Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal
பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 1, Issue 1, May 2021 E-ISSN – 2583-715X



# The State of Women in the Dramas of Aringar Anna

**Dr. K. Nagendran,** Assistant Professor of Tamil, Sri.S.Ramasamy Naidu Memorial College, Sattur, Virudhunagar District, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0003-2865-7832**
**DOI: 10.5281/zenodo.7809708**

## Abstract

*Emotions are rooted in man's innermost feelings and nostalgia in the mind. All of these negative experiences must be changed to bring about a great change in society. Aringar Anna's is one of the political luminaries who came to power after independence to make the state of the poor people better manner. Vimala Ramani claims that 'writing is a process that unleashes the fire of the heart is a main to the literary work and the literary critic. The purpose of the paper is to show that Aringar Anna has used plays as a tool to expose the atrocities done to women and to try to create a renaissance in society through his plays to emancipate women.*

**Keywords:** Society, Patriarchy, Prostitutes, Widow, untouchability, remarriage.

## References

[1] Bharathidasan, Bharathidasan Poems, Senthamizh Nilayam, Trichy, First Edition, 1970.
[2] Prema, Ira. Feminist Attitudes, Tamil Library, Chennai, 1st ed, 1998.
[3] Malayaman, Malayaman Poems, Cinematography, Chennai, First Edition, 1989.
[4] CN Annathurai, One Night, Pavai Publication, 142, Raiyapet, Chennai - 14, Second Edition, 2015.
[5] Scholar Anna, Love Torch, Kaura Publishing House, 2008.
[6] Scholar Anna, Gateway to Heaven, Kaura Publishing House, 2008.
[7] Shanmuga Sundaram.Su, Scholar Anna, Sakithiya Academy, Ravindrapavan, New Delhi, Fifth Edition, 2015.
[8] Aravanan.K.P., Cultural Invasion of Tamils. Fifth Edition, First Edition, Chennai.1987.
[9] Prema, Ira., Feminism, Tamil Library, Fifth Edition, Chennai, 2013.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

**Pandian Journal of Women's Studies**
*Peer-Reviewed Journal*

*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*

**Volume 1, Issue 1, May 2021** **E-ISSN – 2583-715X**



# அறிஞர் அண்ணா நாடகங்களில் பெண்கள் நிலை

**முனைவர் கி. நாகேந்திரன்,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, ஸ்ரீ எஸ்.இராமசாமி நாயுடு ஞாபகார்த்தக் கல்லூரி, சாத்தூர், விருதுநகர் மாவட்டம், தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0003-2865-7832
**DOI: 10.5281/zenodo.7809708**

**ஆய்வுச்சுருக்கம்**

மனிதனின் உள்மனதில் வேரூன்றியுள்ள உணர்ச்சிகள், உள்மனதில் ஏற்படும் ஏக்கங்கள் தன் கண்முன் ஏற்பட்ட அனுபவங்கள் அனைத்தும் சமுதாயத்திற்கு மாற்றம் கொண்டு வரவேண்டும் என்பது படைப்பாளனுக்கு ஒரு வாய்க்காலக அமைவதே அவன் படைத்த படைப்புகளாகும். 'எழுத்து என்பது இதயத்தின் அக்னியை வெளிக்கொண்டு வரும் ஒரு பிராசஸ்' என்ற விமலா இரமணியின் கூற்று இலக்கிய வாதியின் இலக்கியப் படைப்பிற்கு முக்கியமாக அமைகின்றது. அறிஞர் அண்ணா நாடகங்களைக் கருவியாகக் கொண்டு பெண்களின் கொடுமைகளை வெளிக்காட்டி, சமுதாயத்தில் மறுமலர்ச்சியை உண்டாக்க முயன்றவர் என்பதை அவர் நாடகங்கள் மூலம் எடுத்து இயம்புவதே ஆய்வுக்கட்டுரையின் நோக்கமாகும்.

**திறவுச்சொற்கள்:** சமுதாயம், ஆணாதிக்கம், விலைமகளீர், விதவை, தீண்டாமை, மறுமணம்.

**முன்னுரை**

தமிழிலக்கியங்களில் சங்ககாலம் முதல் பல்வேறு காலங்களில் பெண்கள் பற்றிய செய்திகள் எடுத்தியம்பப்பட்டுள்ளன. தற்கால இலக்கியமான நாடகம், சிறுகதை, புதினம், கவிதைகள் ஆகியவற்றிலும் கருப்பொருளாகப் சமுதாயத்தில் பெண்களின் நிலை பற்றி கூறப்பட்டுள்ளன. மனித சமுதாயத்தின் தோற்றத்திற்கு அடிப்படைக் காரணமாகவும், சமுதாய வளர்ச்சியின் ஓர் உறுப்பாகவும் திகழும் பெண், ஆணாதிக்கச் சமுதாயத்தில் உரிமைகளை இழந்து ஆண்களுடைய உடைமைப் பொருளாகவும், போகப்பொருளாகவும் இருந்து வருகிறாள். பெண்ணின் அழகையும் பொருளையும் விரும்பும் ஆண், அவளுடைய அறிவுத்திறனையும், துணிச்சலையும் ஏற்றுக்கொள்ளத் தயங்குகிறான். அறிஞர் அண்ணாவின் நாடக இலக்கியங்களில் பெண் சமுதாயம் எவ்வாறு சித்தரிக்கப்பட்டிருக்கிறது என்பதை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

Pandian Journal of Women's Studies
Pandian Journal of Women's Studies
We are New Women
*Peer-Reviewed Journal*
*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*

**Volume 1, Issue 1, May 2021** **E-ISSN – 2583-715X**

மனிதத் தோற்றத்திற்கு அடிப்படைக் காரணமாக அமையும் பெண்மை குறித்து,

**பெண்மை என்பது மண்ணடிப் பெருவேர்**

**ஆண்மை மேலே அசையும் பசுங்கிளை**

**பெருவேர் வாடினால் மானுடம் வாடும் (மலையமான்,மலையமான் கவிதைகள், ப.32)**

என்பார். அன்று முதல் இன்று வரை ஆணுக்குப் பணிவிடை செய்யும் ஒரு கருவியாகவே பெண், அக்காலத்தில் வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடந்த பெண் கால மாற்றத்தால் மெல்ல, மெல்ல முன்னேறி கல்வி கற்று இருக்கிறாள். ஆணுக்கு இணையாகப் பணியாற்றும் ஆற்றலைப் பெற்றாள் என்றாலும், முழுமையான மதிப்பை இந்தச் சமூகம் பெண்ணுக்கு இன்னும் வழங்கவில்லை என்றே கூறலாம். இன்றைய சமுதாயம் பெண்களை அடிமைகளாகக் கருதி வரும் நிலையில் பெண்களின் பெருமையை அந்நாளில் பாரதியார்,

**பெண்மை வாழ்கென்று கூத்திடுவோமடா!**

**பெண்மை வெல்கென்று கூத்திடுவோமடா!**

**தன்மை இன்பம்நற் புனிணியஞ் சேர்ந்தன**

**தாயின் பேரும் சதியென்ற நாமமும் (*பாரதியார் கவிதைகள்* ப.215)**

என்று பாடியுள்ளமையை அறிய முடிகின்றது. மேலும், புதுமைப் பெண்களைப் பாரதி பாடும் பொழுது,

**நிமிர்ந்த நன்னடை நேர் கொண்ட பார்வை**

**நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும் (*பாரதியார் கவிதைகள்* ப.204)**

என்று பாடியுள்ளார்.

**பெண்ணியம் விளக்கம்**

பெண்ணியம் என்பது பெண்களின் உரிமைக்காகப் போராடும் ஓர் இயக்கம் ஆகும்.

**பெண்கள் உடைந்த விலங்கை உதறிவிட்டு, ஒளிமயமான எதிர்காலத்தை நோக்கி, எச்செயல்களைச் செய்யவும், எக்கருத்தினைக் கூறவும், தடையற்ற முழுவுரிமை பெறுவதே பெண்ணியம் (*திருக்குறளில் பெண்ணியம்* ப.61)**

எனலாம். பெண் என்பவள் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்ற நான்கு குணங்களின் அடிப்படையில் இருக்கக் கூடியவள். வீட்டிற்கு உள்ளேயே முடங்கிக் கிடந்த காலம் போய், சற்று முன்னேறி ஆணுக்குச் சமமாக சமுதாயத்தில் அனைவராலும் மதிக்கப்படுகிறாள். ஆணும் பெண்ணும் இயற்கையின் படைப்பில் சம உரிமை உடையவர்கள். ஆணிற்கு உள்ள அனைத்து உரிமைகளும் பெண்ணுக்கும் வழங்கப்பட வேண்டும். இந்நாளில் பெண்கள் சமுதாயத்திலும்,

குடும்பத்திலும், அரசியலிலும், வேலை செய்யும் இடங்களிலும் உரிமையின்றி அடிமைபோல் நடத்தப்படுகின்றனர். இந்நிலை மாற வேண்டும். பெண்களுக்கும் சமமதிப்பு வழங்கப்பட வேண்டும் என்பதற்காகவே பெண்ணியம் தோன்றியது. இக்கருத்தை,

**ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்**

**அறிவில் ஓங்கி இவ்வையகம் தழைக்குமாம் (*பாரதியார் கவிதைகள்* ப.258)**

என்கிறார் பாரதியார்.

**பெண்ணியம் என்பது பெண்கள் மீதான வரலாறு, மத பொருளாதார – பண்பாட்டு ரீதியான ஒடுக்கு முறையின் அகநிலை உண்மைகளை ஆராய்வது. அதாவது பெண்கள் மீதான ஒடுக்குமறையின் பல்வேறு பரிமாணங்கள் அதற்கான தீர்வுகள், அதை அடைவதற்கான வழிமுறைகள் இவற்றை ஆராய்வதாகும்" (*பெண்ணியம் அணுகுமுறைகள்,* ப.19)** என்பர்.

**ஆணாதிக்கம்**

தற்காலத்தில் பெண்கள் ஆண்களுக்கு நிகராக எல்லாத் துறைகளிலும் ஏற்றம் பெற்றுச் சிறந்து விளங்கினாலும், ஆணாதிக்கச் சமூகம் பெண்களுக்குச் சுதந்திரத்தை வழங்க மறுக்கின்றது. பெண்கள் ஒரு போகப் பொருளாகவும் என்றைக்கும் ஆண்களுக்குக் கட்டுப்பட்டு வாழ வேண்டியவர்களாகவும் நடத்தப்படுகின்றனர். சமுதாயத்தில் ஆண்களுக்குப் பெண்கள் அடிமை எனும் நிலை இன்றும் பல இடங்களில் காணப்படுகின்றது. அத்தகைய பெண்ணடிமைத் தனத்தை ஒழிக்க வேண்டும் என்பதை பாரதிதாசன்,

**பெண்ணடிமை தீருமட்டும் பேசும் திருநாட்டு**

**மண்ணடிமை தீர்ந்துவருதல் முயற்கொம்பே (*பாரதிதாசன் கவிதைகள்,* தொகுதி 1, ப.3)**

என்கிறார். அறிஞர்அண்ணா பெண்களின் கொடுமைகளை நாடகங்களைக் கருவியாகக் கொண்டு வெளிக்காட்டவும், மறுமலர்ச்சியை சமுதாயத்திற்கு உண்டாக்கவும் முயன்றவர் என்பதை அவர் நாடகங்கள் வழி அறிய முடிகிறது. சமுதாய நலனில் அக்கறையும், சமூகப் பொறுப்புணர்வும் கொண்டு மானுடத்தின் விடுதலையைப் பெற முயன்றுள்ளார். அண்ணா காலம் காலமாக இருந்து வரும் வருணம், இனம், சாதி முதலிய மேலாதிக்க உணர்வுகளை ஒதுக்கவும், சாதி வர்க்கம், முதலிய வேறுபாடுகளைக் களையவும், தமது நாடகங்களின் மூலம் தம் கருத்தை வெளிப்படுத்தியுள்ளார். வரதட்சணைக் கருத்துகளையும் தம் நாடகங்களில் எடுத்துக்காட்டியுள்ளார். சமுதாயச்சிந்தனை கொண்ட சீர்திருத்தக் கருத்துக்கள் அடங்கிய அண்ணாவின் படைப்புகளில் பெண்களின் மதிப்பீடு பற்றியே இவ்வாய்வு அமைகிறது.

**Volume 1, Issue 1, May 2021** **E-ISSN – 2583-715X**

அண்ணாவின் நாடகங்களில் பெண்களின் படைப்புக்களைப் பின்வரும் பார்வைகளில் பகுத்துப் பார்க்கப்படுகிறது. பெண்களுக்கு வரதட்சணைக் கொடுமைநிலை, விலை மகளிரின் அவல நிலை, விதவைப்பெண்ணின் மறுமண நிலை, தீண்டாமையினால் பெண்களின் நிலை மற்றும் சமூகத்தில் ஆணாதிக்கக் கொடுமைகளைக் கண்ட அண்ணா தமது நாடகங்கள் மூலம் பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுத்துப் படைத்துள்ளார் என அறிய முடிகிறது. அண்ணாவின் நாடகங்களில் சமுதாயத்தில் ஏற்படும் பிரச்சனைகள், பெண்ணடிமைத்தனம், மூடநம்பிக்கை போன்றவற்றிற்கு தீர்வுகள் ஏற்படும் வகையில் கதாப்பாத்திரப் படைப்புகள் அமைக்கப்பட்டு உள்ளதைக் காண முடிகிறது.

**பெண்களுக்கு வரதட்சணை நிலை**

தற்கால உலகில் வரதட்சணை ஒழிப்புச் சட்டம் நடைமுறையாக இருந்தாலும், மக்களின் வாழ்க்கை நிலைக்கு ஏற்ப தம் சமுதாயத்தில் வரதட்சணைப் பெறும் நிலை இன்று வரை இருக்கின்றது.

> **ஸ்ரீதனம் என்ற சொல்லே தமிழில் வரதட்சணை என்று குறிப்பிடப்படுகின்றது. தமிழ்ச் சொற்களான பரிசு, பரிசம், முலைவிலை, முலைக்கூலி, தழைவிலை, தன்தழை விலை, கையுறை முதலான சொற்கள் வரதட்சணை என்ற பொருளில் ஆளப்பட்டது. ஆனால், தமிழில் சொல்லப்பட்ட இவையாவும் பெண்களுக்குப் பரிசளித்த செயல்களையே குறித்ததாகவும் கூறுவர். ஆண்களுக்குத் தட்சணைக் கொடுத்துப் பெண்ணையும் கொடுக்கும் பழக்கம் ஆரியரிடமிருந்து வந்தது என்றும் கருதுவர். (க.ப.அறவாணன், *தமிழர் மேல் நிகழ்ந்த பண்பாட்டுப் படையெடுப்புக்கள்.* ப.162)**

வரதட்சணை இன்றளவும் பெண்களுக்கு ஏற்படும் தொல்லையாக உள்ளது. அண்ணாவின் நாடகங்களில் பெண் பாத்திரப்படைப்புகள் குறைவு என்றாலும், ஓரிரு பெண் பாத்திரங்களுக்குத் தனித்துவம் கொடுத்து அமைத்துள்ளமையைக் காணமுடிகிறது. சொர்க்க வால் எனும் நாடகத்தில் வரும் திலகா அன்றாடம் பூ விற்றுப் பிழைப்பு நடத்தும் குடும்பத்தைச் சேர்ந்தவளாகக் காட்டப்படுகிறாள். வறுமை நிலையில் ஏழ்மையானவளுமாக, எளிமையானவளுமாக, எழிலானவளுமாக இருக்கிறாள். அவள் காதலிக்கும் முத்து மாணிக்கம் செல்வந்தரின் மகன். முத்து மாணிக்கத்தின் தந்தை இவர்களின் காதலுக்கு எதிர்ப்பு தெரிவிக்கிறார். முத்து மாணிக்கம் இந்த எதிர்ப்புக்கு மறுப்புத் தொவிக்கிறான்.

இதனால் கோபமுற்ற முத்து மாணிக்கத்தின் தத்தை திலகாவின் சகோதரன் மதிவாணனிடம் சென்று கூறுகிறார். மதிவாணனோ எள்ளி நகையாடி ஒன்றுபட்ட இரண்டு

Pandian Journal of Women's Studies
Pandian Journal of Women's Studies
*We are New Women*
*Peer-Reviewed Journal*

*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
**Volume 1, Issue 1, May 2021** **E-ISSN – 2583-715X**

உள்ளங்களின் மகிழ்ச்சிக்கோ, திருமணத்திற்கோ நீங்கள் தடையாக இருப்பதில் பயன் இல்லை என்று மறுப்புத் தெரிவிக்கிறான். இதனால் மேலும் கோபமடைந்த மேல் தட்டு இனமான செல்வந்தர் ஏழைகளின் இயலாமை எனும் நிலையைச் சீண்டிப்பார்க்க "உன் தங்கையின் எடைக்கு எடை தங்கம் கொடுத்தால் திருமணத்திற்குச் சம்மதிப்பேன் முடியுமாடா உன்னால் முடியுமா?" (சி.என் அண்ணாத்துரை, *சொர்க்கவாசல்* ப.33) என்கிறார். எடைக்கு எடை தங்கம் இருந்தால் உன் தங்கைக்கு வாழ்க்கை தரப்படும். உன் தங்கையின் காதல் தங்கத்தில் இருக்கிறது என்பதான நிலையை உணர்த்துவதன் மூலம் வரதட்சணைக் கொடுமை இங்கு சுட்டிக் காட்டியுள்ளமையை அறியமுடிகிறது. வரதட்சணை அந்த காலகட்டத்தில் மேலோங்கி இருந்தது என்பதை மேலும் அறியமுடிகிறது.

**விலை மகளிரின் அவல நிலை**

உலகின் அனைத்து நாட்டு வரலாற்றிலும் நெடுங்காலமாகப் பொதுமகளிர் இருந்தமையைக் காணமுடிகிறது. மனிதர்கள் நாடோடிக் கூட்டங்களக வாழ்ந்த காலத்தில் இருந்தே பொதுமகளிர் நடைமுறை துளிர்விட்டுள்ளது. இவை வளர ஆரம்பித்து விட்டன. பின் அரசாட்சி அமைந்த காலத்தில் இவை செழித்தோங்கியுள்ளன. இவ்வாறு பெண்களை இழிவுபடுத்திய பரத்தமை ஒழுக்கத்தை ஒழிக்கும் புது மலர்ச்சி இயக்கத்தில் ஈடுபட்டுள்ளார் அண்ணா என அறியமுடிகிறது. அவ்வகையில் ஆண்களைப் போல் அனைத்து உரிமைகளையும் பெண்கள் பெற்றால் விபசாரம் ஒழியும் என்பதைக் காட்டுவதாக அண்ணாவின் நாடகங்கள் ஆக்கப்பட்டுள்ளன. பிறப்பால் விலைமகளாகப் பிறந்தவர்களையும், விலை மகளானவர்களையும், ஆண் சமுதாயக் கொடுமைகளால் துணையில்லாமல் வறுமை, பொருளாதார நிலையின் காரணமாக வாழ வழியற்ற நிலையில் தன்னை ஆதரிக்க எவருமில்லாத நிலையில் விலைமகளானவர்களையும், இளம்வயதில் விதவைகளாகி மறுவாழ்வு பெறாமல் ஆண்களின் வஞ்சகத்தினால் வழுக்கி விழுந்தவர்களையும் அண்ணா தமது நாடகங்களில் படைத்துள்ளார்.

ஜமீன்தார்கள் செல்வந்தர்கள் பற்றிய நாடகங்களில் விலை மகளிர் இடம் பெறுகின்றனர். அண்ணாவின் 'ஓர் இரவு' நாடகத்தில் சொர்ணம் எவ்வாறு தான் தேவரால் கைவிடப்பட்டு மிட்டாதாரருக்கு ஆசை நாயகி ஆனாள் என்பதைப் பற்றியும், ஆண்கள் தங்கள் வசதிக்கு மட்டும் பெண்களைப் பயன்படுத்திக் கொண்டு பின்னர் தனது சமுக மதிப்பு, மரியாதை, குலம் எனக் காரணம் காட்டி கைவிடப்பட்ட அவல நிலையைப் பற்றியும் கருத்து நிலை வைத்துள்ளமையைக் காண முடிகிறது.

Volume 1, Issue 1, May 2021 E-ISSN – 2583-715X

**விதவைப்பெண்ணின் மறுமண நிலை**

தமிழ்ச் சமுகத்தில் சாதிகள் கடந்த பெண்கள் சந்தித்து வரும் கொடுமைகளில் விதவை நிலையும் ஒன்று கணவனை இழந்த பெண்கள் படும் துயரத்தை,

சொல்லிச் சிரிக்கும்

**சொந்தங்களுக்கிடையே பட்டமரம்..... கெட்டமரம்**

**நான் பெத்த மகளே ...நீ**

**பருவத்திலே இந்தமரம் (*விடுதலை வேண்டினும்* ப.70)**

என்று பெற்றவர்கள் படும் நிலையை ஒவ்வொரு மகளைப் பெற்றவருக்கும் கண்ணீர் வரவைக்கும் என்று கூறலாம். கைம்மை நோன்பு பூண்டு வாழ்கின்ற பெண்களின் நிலையை இக்கவிதை கூறுகின்றது.மேலும்,

**மக்கள் இழந்த இடும்பையினும்**

**மனையாள் இறந்த இடும்பையினும்**

**மிக்க இடும்பை ஒவ்வாத**

**விதவை இடும்பை ... (*பாரதிதாசன்,* மு.நூ., பா.72)**

துயரத்திற்கு மாற்றுவுண்டு கணவண் இறந்த துன்பத்திற்கு மாற்று இல்லையா என்பதை 'கணவனை இழந்தோர்க்கு காட்டும் இல்' என்று சிலப்பதிகார தொடர்கள் எடுத்து இயம்புகின்றன. இதனை மாற்ற வேண்டும் என்று அறிஞர் அண்ணா 'காதல் ஜோதி' எனும் நாடகத்தில் 'விதவைகளுக்கு மறுவாழ்வு கிடைக்க வேண்டும் என்ற உரிமைக் குரலை அண்ணா உயர்த்தியுள்ளமையை அறிய முடிகிறது. நகரத்தில் மருத்துவராகப் பணிபுரியம் சுகுணா மேட்டுக்குடியில் பிறந்தவள். இளம் விதவை. இவள் சீர்திருத்தக் கருத்து உடையவளாக படைக்கப்பட்டிருக்கிறாள். வேறு குலத்தைச் சேர்ந்தவரைக் காதலிக்கிறாள். வேறு குலத்தைச் சேர்ந்த விதவைப் பெண்ணுக்கு அவள் காதலித்த வேறு குலத்தவனை முன்னின்று மணம் செய்து வைக்கிறாள். சுகுணாவின் தந்தை வேறு குலத்தவனைக் காதலிப்பதை ஏற்க மறுக்கிறார். ஆனால் தந்தையை மீறித் துணிவுடன் தான் காதலித்தவனையே மணக்கிறாள் சுகுணா. இதனைக் கீழ்வரும் பகுதி விளக்குவதாக அமையும்.

தங்கவேலு வேண்டாம் என்று தான் கூறினார்; நான் தான் அவருக்கு தைரியம் கொடுத்தேன். ஜாதி மதம், இது எல்லாம் நான்சென்ஸ் "காதல் ஜோதி முன்பு இது எல்லாம் தலை காட்டாது என்று சொன்னேன் (சி.எ அண்ணாத்துரை, *காதல்ஜோதி* ப.70) என்கிறாள் சுகுணா. வாழ்வை இழந்தால் மறுவாழ்வே இல்லை என்று கூறும் வன்முறையான விதவைப்

Volume 1, Issue 1, May 2021 E-ISSN – 2583-715X

பெண்கள் செயல்பாடுகளை வெளிக்காட்டி உள்ளார். இந்த காலத்தில் தம் நாடகங்கள் மூலம் நடைமுறை மறுவாழ்வு வழங்கும் நிலையை அண்ணா வெளிக்காட்டுகிறார்.

**தீண்டாமையினால் பெண்களின் நிலை**

பண்டைத் தமிழகத்தில் பிறப்பின் அப்படையிலான பாகுபாடுகள் இல்லை. ஆரியர் வருகைக்குப் பின்பே பிறப்படிப்படையிலான பாகுபாடுகளை உருவாக்கினர். இதன் அடிப்படையில் *மனுதரும சாத்திரம்* போன்ற நூல்கள் எழந்தன. புறநானூற்றிலும்,

**வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும்**

**கீழ்ப்பால் ஒருவன் கற்பின்**

**மேற்பால் ஒருவனும் அவன் கண் படுமே (*புறநானூறு* 381)**

என்ற பாடல் பகுதி மேற்பால் கீழப்பால் எனும் உயர்வு தாழ்வோடு நாற்பால் பகுப்பு ஏற்பட்டு விட்டதைக் காட்டுவதாக உள்ளது. அண்ணாவின் கூற்றுப்படி சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம் இவற்றுக்கு இடையூறாக, மனிதனின் அறியாமையையும் அகங்காரத்தையும் வளர்க்க வேண்டும் அடிப்படையில் தம் நாடகங்களில் கூறியிருக்கிறார். இந்த தீண்டாமை கொடுமைகளை 'வேலைக்காரி' எனும் நாடகம் காட்டுவதாக உள்ளது. செல்வந்தர் வேதாசல முதலியாரின் மகன் மூர்த்தி தன் வீட்டு வேலைக்காரியான அமிர்தத்தைக் காதலிக்கிறான். திருமணம் செய்து கொள்வதாக வாக்குறதி அளிக்கிறான். ஆனால் அதற்குத் தடையாக வேதாசலமுதலியாரின் கண்டிப்பும் தீண்டாமை என்ற வேலியும் தடையாக இருப்பதாக இந்நாடகத்தில் கட்டிக் காட்டுகிறார் அண்ணா. இதற்கு கீழ் வரும் பகுதி சான்றாக அமைகிறது. "கேளாளர் வீட்டுப் பிள்ளைக்கும் வேலைக்காரிக்கும் கல்யாணம் நடக்கமுடியா? பெற்றோர்கள் சம்மதிப்பர்களா?" ( சி.என்.அண்ணாதுரை, *வேலைக்காரி* ப.57. )

**முடிவுரை**

அறிஞர் அண்ணா தமது நாடகங்களில் சமகாலப் பிரச்சினைகளைப் பெண்களுக்கு வரதட்சணை நிலை, விலை மகளிரின் அவலநிலை, விதவைப்பெண்ணின் மறுமண நிலை, தீண்டாமையினால் பெண்களின் நிலை ஆகியவற்றை முன் வைக்கிறார். சமூக சீர்திருத்தும் நோக்கில் இவற்றிற்குத் தீவையும் வைக்கிறார். பெண்களின் உரிமைய்யும் வாழ்வியல் நிகழ்வையும் பிரதிபலித்துக் காட்டுகிறார். அவர் வாழ்ந்த காலகட்டத்தில் பெண்களின் நிலையை படம் பிடித்து காட்டுவதோடு .பெண்களின் பிரச்சினைக்காக குரல் கொடுத்தும் அவர்களின் உரிமையைப் பெற்றுத்தர நாடகங்களின் மூலமாக அரும்பாடுபட்டுள்ளார் என்பதை உணர முடிகிறது.

Volume 1, Issue 1, May 2021 E-ISSN – 2583-715X

**துணைநூற்பட்டியல்**

[1] பாரதிதாசன், *பாரதிதாசன் கவிதைகள்,* செந்தமிழ் நிலையம், திருச்சி, முதல் பதிப்பு, 1970.

[2]பிரேமா,இரா. *பெண்ணிய அணுகுமுறைகள்,* தமிழ்ப் புத்தகாலயம்,சென்னை,முதல் பதிப்பு 1998.

[3] மலையமான், *மலையமான் கவிதைகள்,* ஒளிப்பதிப்பகம், சென்னை, முதல்பதிப்பு, 1989.

[4] சி.என்.அண்ணாதுரை, *ஓர் இரவு,* பாவை பப்ளிகேஷன், 142, இராயப்பேட்டை, சென்னை – 14, இரண்டாம்பதிப்பு, 2015.

[5] அறிஞர் அண்ணா, *காதல் ஜோதி,* கௌராபதிப்பகம், 2008.

[6] அறிஞர் அண்ணா, *சொர்க்க வாசல்,* கௌராபதிப்பகம், 2008.

[7] சண்முக சுந்தரம்.சு, *அறிஞர் அண்ணா,* சாகித்திய அகாதெமி, இரவீந்தரபவன், புது தில்லி, ஐந்தாம் பதிப்பு, 2015.

[8] அறவாணன்.கா.பா., *தமிழர் மேல் நிகழ்ந்த பண்பாட்டு படையெடுப்புகள்.* ஐந்திணை பதிப்பகம், முதற்பதிப்பு, சென்னை.1987.

[9] பிரேமா, இரா., *பெண்ணியம்,* தமிழ்ப் புத்தகாலயம், ஐந்தாம் பதிப்பு, சென்னை, 2013.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.